27th June 1957]

The House reassembled at half past two of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Tamil officers in the Special Armed Police in Andhra Pradesh.

* 7 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. Minister for Home be pleased to state, with reference to the answer given to clause (*d*) of the Starred Question No. 220-A on 16th August 1956, the decision taken by the Government regarding the request of Tamil officers in the Special Armed Police in Andhra?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government decided to repatriate all the Tamilian personnel serving in Andhra Pradesh Special Armed Police as a result of which all such personnel except those who preferred otherwise have since been repatriated to this State.

MR. SPEAKER : We shall take up Question No. 8 later on.

Pig Iron Factory.

* 9 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to set up a factory for the production of pig iron in Madras; and

(*b*) if so, where?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Yes, Sir. There is a proposal to set up in the public sector a plant in Salem for the manufacture of pig iron from the low grade ores available in that district.

SRI N. K. PALANISAMI : இந்த காண்டிராக்ட் எத்தனை வருஷ காலத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : பப்ளிக் செக்டாரில் செய்யப் போவதாக உத்தேசம், அதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். இதில் காண்டிராக்ட் ஒன்றும் இல்லை.

SRI K. ANBAZHAGAN : சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை தொடங் கப்போவதால் அதற்கு நெய்வேலியில் இருந்து கிடைக்கும் நிலக்கரியைப் பயன் படுத்தத் திட்டம் ஏதாவது உண்டா ? அந்தத் திட்டத்தை மத்திய சர்க்கார் நிர்வகிக்குமா அல்லது மாகாண சர்க்காரே ஏற்று நடத்துமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நெய்வேலி நிலக்கரியை உப யோகப்படுத்த முடியுமா என்பதைத்தான் ஜாம்ஷட்பூரில் உள்ள நாஷனல் மெட்டலர்ஜிகல் லாபரடரியில் பரிசீலனை செய்யப்படுகிறது. அந்தப் பரிசீலனைக் குப் பிறகுதான் நெய்வேலி நிலக்கரி உபயோகப்படுமா இல்லையா என்பது தெளிவுபடும்.

[27th June 1957

SRI N. K. PALANISAMI : சேலத்தில் இந்த பாக்டரியை ஏற்படுத்தப் போவதன் மூலமாக இந்த மாகாணத்தில் உற்பத்தியாகப் போகும் ஸ்டீல் பிளான்ட்டின் கபாஸிடி எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : ஸ்டீல் பிளாண்ட் வேறு; பிக் அயர்ன் வேறு. இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

SRI A. A. RASHEED : Will the matter be taken up soon ?

THE HON. SRI R. VENKATARAMAN : The matter is under examination by the National Metallurgical Laboratory at Jamshedpur. Samples of ore are being sent to that place for testing. As soon as the results of the examination are received, we may move further in the matter.

SRI A. GOVINDASAMY : சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கு நெய்வேலி நிலக்கரியை உபயோகப்படுத்தலாம் என்று ஜெர்மனி நிபுணர் கூறியிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அப்படி ஒன்றும் இல்லை. ஜெர்மனியில் லோ கிரேட் நிலக்கரியை லோ ஷாப்ட் பர்னஸுக்கு உபயோகப் படுத்துவதாகவும் பழுப்பு நிலக்கரியாக இருந்தாலும்கூட இரும்பு உற்பத்தி செய்யலாம் என்றும் அந்த நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைத் தான் நமது நாஷனல் மெட்டலர்ஜிகல் லாபரடரி பரிசீலனை செய்கிறது.

SRI S. B. ADITYAN : நமது ராஜ்யத்தில் பிக் அயர்ன் உற்பத்தி செய்வதற்கு தனியாருக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது அல்லவா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இரண்டு பேருக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒன்று கோயம்புத்தூர் டெக்ஸ்டைல் கெமிகல் கம்பெனிக்கு 50 டன் கபாஸிடி உற்பத்தி செய்வதற்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னொன்று ராமகிருஷ்ண இன்டெஸ்டரி கம்பெனிக்கு 30 டன் உற்பத்தி செய்ய லைசென்ஸ் கொடுக்கலாமா என்பது பரிசீலனையில் இருக்கிறது.

SRIMATHI T. N. ANANDANAYAKI : இந்தப் பரிசீலனையின் முடிவு எத்தனை நாளைக்குள் தெரியும் என்பதை கனம் மந்திரி அவர்கள் ஏறக்குறைய சொல்வார்களா ?

MR. SPEAKER : அதை அவர் எப்படிச் சொல்ல முடியும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : சாதாரணமாக ரிஸர்ச் செய்வதில் நமக்கு அதிருஷ்டம் இருந்தால் உடனடியாக ரிசல்ட் கிடைத்து விடலாம். சில விஷயங்களில் நாற்றுக்கணக்கான வருஷங்கள் பரிசீலனை செய்தாலும் ரிசல்ட் தெரிவதில்லை.

SRI V. K. KOTHANDARAMAN : சேலத்தில் ஆரம்பிக்க இருக்கக் கூடிய இரும்புத் தொழிற்சாலையை, சீக்கிரமே பரிசீலனை செய்து இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலேயே முடிவு ஏற்படும்படியாகச் செய்வார்களா ? அப்படி இல்லை என்று சொன்னால் அடுத்த ஐந்தாண்டு திட்டத்திலாவது எடுத்துக்கொள்ளப்படுமா ? இப்போது அஸ்ஸாமில் எண்ணெ சுத்தி கரிப்பு ஆலை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்றும் உடனடியாக ஆரம்பிக்கப்படாவிட்டால் அங்குள்ள மந்திரி சபை ராஜிநாமா செய்து விடும் என்றும் சொல்கிறார்களே, அதே போன்று சேலத்தில் உடனடியாக இரும்புத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும், இல்லையானால் இந்த மந்திரி சபை ராஜிநாமாச் செய்துவிடும் என்று அறிவிப்பார்களா ?

MR. SPEAKER : மூல கேள்விக்கும் இந்த உப கேள்விக்கும் சம்பந்தம் கிடையாது.

27th June 1957]

இன்னொரு விஷயம். கேள்வி கேட்கும்போதும், பேச எழுந்திருக்கும் போதும் கனம் அங்கத்தினர்கள் தங்களுடைய சொந்த இடத்தில் உட்கார்ந்திருக்க வேண்டும். ஏனென்றால் அவர்களுடைய பெயரை நான் தப்பாக அழைக்கும்படி நேரிடலாம். அவர்களுடைய பெயரை நான் தப்பாக அழைப்பதாக கனம் அங்கத்தினர்கள் பின்னர் வருந்தக்கூடாது.

Sri A. GOVINDASAMY: கனம் மந்திரி அவர்கள் ஒரு உப கேள்விக்குப் பதில் சொல்லும்போது பரிசீலனை விஷயத்தில் அதிருஷ்டம் இருந்தால் சீக்கிரத்தில் ரிசல்ட் கிடைக்கும் என்பதாகச் சொன்னார்கள். நமது சர்க்காருக்கு அதிருஷ்டம் இருக்கிறதா இல்லையா என்று கேட்கிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN: அதிருஷ்டம் இருக்கிறதா இல்லையா என்று ஜோஸியரைக் கேட்கலாம்.

General Elections, 1957.

*8 Q.—Sri N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the amount spent for the General Elections held during March 1957; and

(*b*) whether Travelling Allowance has been paid to all the officers who conducted the elections?

The Hon. Sri C. SUBRAMANIAM: (*a*) An expenditure of about Rs. 37,58,000 has been incurred by the Government up to the end of April 1957 in connexion with the General Elections 1957 to the House of the People and the Madras Legislative Assembly. Some more expenditure is likely to be incurred on certain items, such as payment of Travelling Allowance bills of polling personnel, etc.

(*b*) Not yet completely, Sir.

Sri N. K. PALANISAMI: போன தேர்தலில் வேலை செய்தவர்களுக்கு இரண்டு மூன்று வருஷங்கள் கழித்துக்கூட அவர்களுக்குச் சேரவேண்டிய பணம் போய் சேர்ந்து இருக்கிறது. அம்மாதிரி நிலைமை ஏற்படாமல் தேர்தலில் வேலை செய்த ஆபீஸர்களுக்கு ஒரு குறிப்பிட்ட மாத காலத்திற்குள் ஊதியம் கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

The Hon. Sri C. SUBRAMANIAM: இது பற்றி எல்லாக் கலெக்டருக்கும் அறிக்கை விடப்பட்டிருக்கிறது. இந்த முறையில் துரிதமாக நடவடிக்கை எடுத்து கூடிய சீக்கிரம் அந்தக் கூலியைப் பட்டுவாடா செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR: இதில் மத்திய சர்க்கார் நம் சர்க்காருக்கு எவ்வளவு தொகை கொடுக்கிறார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

The Hon. Sri C. SUBRAMANIAM: பாதித் தொகை நமக்குக் கொடுப்பார்கள்.

Sri A. V. P. ASAITHAMBI: கூடியவரையில் மூலக் கேள்விக்கும் பதில் தமிழில் சொன்னால் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Mr. SPEAKER: முதலில் கேட்ட கேள்விக்குப் பதில் ஆங்கிலத்திலும், பின்பு தமிழில் கேட்கப்படுகிற உப கேள்விகளுக்கு தமிழிலேயே பதில் சொல்வதும்தான் இங்குள்ள வழக்கம்.